## இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகம் - 2013

இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

நிறுவகம் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன..

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 29,000 தொகையான உத்தியோகத்தர் கடன்கள் உத்தியோகத்தர் கடன் கணக்குகளிற்கு எதிரான ரூபா 27,200 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான நிலுவை பங்களிப்புகளை ஈடுசெய்தல் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 34,200 தொகையான அறவிடப்பட்ட உத்தியோகத்தர் கடன் விடுபடுதல் என்பன காரணமாக ரூபா 7,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான அலுவலக வாடகை ரூபா 412,643 ஆக இருந்த போதிலும் இது ரூபா 366,158 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. ஆண்டிற்கான மிகை ரூபா 46,484 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ரூபா 1,698 தொகையான அலுவலக வாடகை மீதான தண்டப்பணம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 201,689 தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் 1996 இலிருந்து கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டோ அல்லலு செலுத்தப்பட்டோ இருக்கவில்லை.

(ஈ) ரூபா 231,703 கூட்டுமொத்தத் தொகையான இறுதி இருப்புக்கள், நிலையான வைப்புக்களில் பெறவேண்டிய வட்டி வருமானம், டயறிகள் விற்பனை வருமானம் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான கட்டணம் என்பன கணக்குகளில் விடுபட்டிருந்ததுடன் இதன் விளைவால், ஆண்டிற்கான மிகைகள் ரூபா 175,203 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது அதேநேரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 203,453 மற்றும் ரூபா 28,250 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

ரூபா 293,520 மற்றும் ரூபா 110,000 பெறுமதியான முறையே கருத்தரங்குகள் மற்றும் மதிப்பீட்டாளர் இரவு தொடர்பான செலவினங்களுக்குரிய உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டு, ஆதாரமான ஆவணங்கள் போன்றன அவை கணக்காய்விற்காக கோரப்பட்ட போதிலும் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச் சட்டத்தின் ஏ(5)(2) ஆம் பட்டோலை | நிறுவகத்தின் 12 உறுப்பினர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக உறுப்புரிமைக் கட்டணங்களை செலுத்தியிருக்காத போதிலும் அத்தகைய உறுப்பினர்களின் பெயர்கள் உறுப்புரிமை பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் அத்தியாயம் | மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளை முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 347,661 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 143,801 ஆன மிகையை விளைவித்திருந்தது, இது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 203,860 ஆல் குறைவைக் காட்டுகின்றது. நிதிசார் விளைவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 203,860 ஆன வருமான அதிகரிப்புக்கு எதிரான செலவின அதிகரிப்பே இந்த வீழ்ச்சிக்கு பிரதான பங்காற்றியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல் மீளாய்வு**

2013 மார்ச் 04 மற்றும் 2013 யூலை 01 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தின் பிரகாரம் சபையானது அறநெறி நிதியத்தின் நடைமுறைக் கணக்கிலிருந்து நிலையான வைப்பொன்றிற்கு ரூபா 200,000 தொகை மாற்றுவதற்கும் கட்டிட நிதிய சேமிப்பு கணக்கிற்கு கட்டிட நிதிய நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 100,000 தொகை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இத்த தீர்மானத்தை அமுலாக்குவதற்கு 2013 ஆம் ஆண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2009 இலிருந்து தலைமை அலுவலக கட்டிடம் தொடர்பான நடைபெறும் வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் ரூபா 342,400 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. இருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபை காணியில் எவ்வித கட்டிடமும் நிருமாணிக்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டு குத்தகை உடன்படிக்கையை இரத்துசெய்திருந்தது. ஆகவே, அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்றவையாக உள்ளன.

**4.2 போதியளவு செயற்படுத்தப்பட்டிருக்காத பிரதான குறிக்கேள்கள்**

தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் பிரதான குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ). புலமைப்பரிசில்கள், கண்காட்சிகள், உதவிப்பணங்கள் மற்றும் பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் வழங்குவதற்கு.

(ஆ) இலங்கையில் மதிப்பீட்டு தொழிலிலுள்ளோரின் நலன் அல்லது மேம்பாட்டிற்காக கட்டாயமாக இருக்கவேண்டிய தரவு வங்கிகளின் தாபிப்பு மற்றும் பராமரிப்பு உள்ளடங்கலாக அத்தகைய ஏனைய அர்த்தமுள்ள அளவீடுகளை எடுப்பதற்கு.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ஏப்ரல் 01 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக நிறுவகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாமல் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களிடமிருந்து குறைந்த வீதத்தை அறவிட்டிருந்தது. இதன்விளைவாக, நிறுவகத்திற்கு ரூபா 65,150 ஆன தொகை நட்டமேற்பட்டிருந்தது.

**4.5 நகராத மற்றும் மெதுவாக நகரும் விடயங்கள்**

ரூபா 71,190 மற்றும் ரூபா 220,089 தொகையான அசையாத மற்றும் மெதுவாக நகரும் விடயங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருளிருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக 09 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2014 நவம்பர் 17 இலேயே 2013 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு.
(ஆ) நிலையான சொத்து மீதான கட்டுப்பாடு
(இ) பாதீடு